அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம் இல. 387(1)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1988, நவம்பர் 01ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

1988 புதிய திரட்டிய சம்பளங்கள் - நிருவாக சீர்த்திருத்தக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல் - சம்பளங்களும் பதவியணிகளும்.
1987.12.11ஆம் திகதியிட்ட 387ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கான திருத்தம்.

1987.12.11ஆம் திகதியிட்ட 387ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

01. 387ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 01ஐ நீக்கி அதனிடத்தில் பின்வரும் பந்தியைச் சேர்க்க.

"1986.05.02ஆம் தேதியிட்ட 327ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையிற் கொடுக்கப்பட்டுள்ள சம்பளத் திட்டங்களை இச்சுற்றறிக்கையிற் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய திரட்டிய சம்பளத் திட்டங்கள். இச் சுற்றறிக்கையின் 04ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய 1988 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் பதிலீடு செய்யவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும் 11-ஆம் பின்னிணைப்பிலுள்ள 1988 புதிய திரட்டிய சம்பளங்கள், 1988 நவம்பர் 01ஆம் திகதியிலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள அதேவேளையில் 11/-ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள மாற்ற முறைகளின்படி அதிகரிப்பில் அரைவாசி மட்டுமே 1988.01.01இல் இருந்து 1988.10.31 வரை உள்ள காலப்பகுதியில் வழங்கப்படும்."

02. அரைவாசி அதிகரிப்பு கொடுபடற்குரிய காலப்பகுதி முடிவான 1988.12.31 ஆம் திகதியும் முழு அதிகரிப்பு கொடுத்தல் தொடக்கமான 1989.01.01ஆம் திகதியும் 387ஆம் இலக்க சுற்றறிக்கையிலும் அதனோடு இணையும் பின்னிணைப்புகளிலும் முறையே 1988.10.31ஆகவும் 1988.11.01ஆகவும் திருத்தப்படுதல் வேண்டும்.

03. அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் சம்பளங்கள், சம்பளங்கள் பதவியணி குழுவின் சிபாரிசின் பேரில் அல்லது அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் பேரில் மீளமைக்கப் பெற்று 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகரிப்பின் அரைவாசி கொடுபடுமொழுங்கு இருந்திருப்பின் அத்தகைய அரசாங்கக் கூட்டுத்தாபனமும் 1988.11.01இருந்து முழு அதிகரிப்பையும் வழங்கலாம்.

04. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் சம்மதத்துடன் வழங்கப்படுகிறது.

ஒப்பம் : டி. பி. ஜ. பீ. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.